மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்கு முன்னுரிமை பெற தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

Self-employment Scheme

* 34 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) the number of persons who received assistance during 1971–72 under self-employment scheme, introduced by the Government in Salem district;

(b) the amount disbursed to them;

(c) the amount earmarked for this purpose during 1971-72; and

(d) whether the scheme is found fruitful?

சொந்தத் தொழில் திட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டத்தில் அரசால் தொடங்கப்பட்ட சொந்தத் தொழில் திட்டத்தின் கீழ் சென்ற நிதியாண்டில் (1971-72) உதவி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(உ) இதற்காகச் சென்ற நிதியாண்டில் (1971-72) ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(எ) இத்திட்டம் பயனளித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஒருவருமில்லை.

(இ) எதுமில்லை.

(உ) ரூ. 2,00,000.

(எ) தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் பயின்று வேலையின்றி இருக்கும் 3,000 பேருக்கு தலா ரூ. 1,000 பெறுமான கருவிகளும் உபகாணங்களும் கொடுத்து அவர்கள் சுயமாக வேலை எற்றுச் செய்வதற்கான ஒரு திட்டத்திற்கு அரசு 1971-ஆம் ஆண்டு ஒப்பளித்தது. அண்மையில் இத்திட்டத்தை மறு

ஆய்வு செய்து, கடன் உதவித் தொகையை தொழிலுக்குத் தக்கவாறு 5,000 ரூபாய் அல்லது 2,000 ரூபாய் அல்லது 1,000 ரூபாய் என அதிகப்படுத்தி திருத்திய திட்டமொன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை வேலை யில்லா கைத்திறன் வினைஞர்கள் தங்கள் நன்மைக்கும், சுயமாக வேலை ஏற்றுக் கொள்ளவும் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று அரசு நம்புகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னதாக அறிகிறேன். ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக இருந்த நிலைமையில் பலர் வரவில்லையென்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஏன் வரவில்லை என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையிலே வரவில்லையென்று சொன்னேன். இதற்கும் அதே கதிதான். சேலத்திலே 15 பேர் வந்திருக்கிறார்கள். 12 ஆயிரம் ரூபாய் செலவாகியிருக்கிறது. பொதுவாக நாம் பணத்தைக் கொண்டு 'டூல்ஸ்' வாங்கிக் கொடுத்தோம். சிறு 'ஓர்க்ஷாப்', 'ரிப்பேர் ஷாப்' வைக்க வேண்டுமென்று கொடுத்தோம். தேவை யான அளவுக்குப் பணம் போதவில்லை என்பதுதான் சரியான காரணமாக இருக்குமென்று கருதுகிறேன். ஆகவேதான் ரூ. 5 ஆயிரமாக உயர்த்திக் கொடுத்தால் வரலாமென்று முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட இந்த ஆண்டு சேலத்தில் மட்டும் 46 பேருக்கு 1 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு நாம் தொகையை உயர்த்தியிருக்கிறோம். இந்தத் திட்டம் பெரும் பாலும் ஏற்கப்படுமென்று நம்புகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்தப் பள்ளியை விட்டு வெளியே வருகிற மாணவர்கள் தனியாகத் தொழில் வைத்து இயக்குவதற்காக அந்தப் பணம் அளிக்கப்படுகிறது. தனியாகத் தொழில் செய்ய முடியுமா என்ற ஐயம் அந்த மாணவர்கள் பலருக்கு இருக்கிறது என்பது அமைச்சரவர் களுக்குத் தெரியுமா? அதோடு அவர்கள் பள்ளியில் இருக்கிற நேரத்திலேயே தனியாகத் தொழில் நடத்துவதற்குரிய ஒரு பாடத் திட்டத்தை அவர்களுக்கு அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, அதற்குப் பெயரே தொழிற் பயிற்சிக் கல்வி தான். அந்தப் பள்ளியில் படித்தாலே தொழில் செய்கின்ற பயிற்சி ஏற்படும். இன்னும் எந்த அளவுக்கு அவர்களுக்கு அதிக மாகப் பயிற்சி கொடுப்பது என்பது வேறு பிரச்சினை. உண்மையிலேயே ஐ.டி.ஐ. பாய்ஸ் கூட இல்லை. இன்ஜினியரிங் படித்தவர்களே தனியாகத் தொழில் என்றால் தயக்கம் காட்டுகிறார்கள். அதற்குப் பல காரணங்கள்

இருக்கின்றன. முதல் போட வேண்டும், சிட் கேப்பிடல் போட வேண்டும். நாமே சிட் கேபிடல் கொடுத்து, நூற்றுக்கு நூறு நாமே கடன் கொடுக்கிறோம். இடம், கட்டிடம் வேண்டும். அதை நாம் கொடுப்பதாக ஏற்பாடு செய்திருக்கிறோம். இயந்திரங்களை நாமே வாங்கிக் கொடுக்கிறோம். அதைவிட சந்திக்க வேண்டிய பிரச்சினை எல்லாம் மூலப்பொருள், மார்க்கெட்டிங் இவைகள் தான். 'பைனன்சை'ப் பொறுத்த அளவில் எந்தவிதமான கஷ்டமும் கிடையாது. இந்த உண்மையான காரணத்தால்தான் எத்தனையோ பேர் தொழில் தொடங்க தயக்கம் காட்டுகிறார்கள். இந்த இரண்டும் நம்முடைய மாநில அரசாங்கத்தின் அதிகாரத்தில் இல்லை. இதுதான் உண்மையான காரணம். கொஞ்சம் சம்பளம் கிடைத்தாலும் சரி, எங்கேயாவது ஒரு இடத்தில் மாதச் சம்பளம் வாங்க வேண்டுமென்ற உணர்வுதான் இருக்கிறது. இதற்கு ஊக்கமில்லையென்று கூட காரணம் சொல்ல முடியாது. இப்படிப்பட்ட சிக்கல்கள் தனியாகத் தொழில் ஆரம்பித்தால் இருக்கின்றனவென்று நாம் கண்டுபிடித்திருக்கிறோம். இதை மாற்றியமைப்பதற்கு நாம் ஒரு திட்டம் தயாரித்து, தமிழ் நாட்டிலுள்ள பெரிய பெரிய தொழிற்சாலைகளில் எங்கெங்கே இந்தத் துணைத் தொழிற்சாலைகள் (ஆன்சிலரி இண்டஸ்டிரீஸ்) ஏற்படுத்த முடியுமென்று நாமே அறிக்கை தயாரித்து, நாமே அவர்களுக்குத் திட்டம் போட்டுக் கொடுத்துச் செய்யலாமோ என்று முயற்சி எடுத்து வருகிறோம். எந்த அளவுக்கு வெற்றி தருமென்று நாம் அனுபவத்தில் பார்க்கலாம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, எத்தனை பேர் இந்தத் தொழிற்சாலைகளை ஏற்று நடத்தியிருக்கின்றார்கள் என்ற விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இதிலே வெற்றி அதிகமாக எதிர்பார்க்க முடியாது. சேலத்தில் 15 பேர் வாங்கியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில், கிராமங்களிலே சிறுசிறு பட்டறைகள் (ஓர்க்ஷாப்புகள்) வைத்து, டிராக்டர்கள் பழுது பார்க்கவும், ஆட்டமோபைல்ஸ் ஓர்க்ஷாப் சிறிய அளவில் வைக்கவும் ஏற்பாடு இருக்கிறது. இதிலும் வெற்றி சரியாக ஏற்படவில்லை. அங்கேயுள்ள பயிற்சி பெற்ற மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டுவதாக நமக்குத் தெரியவில்லை.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாயோடு மட்டுமல்லாமல், 5 ஆயிரம் ரூபாய் வரை இந்தத் தொழில் செய்யக்கூடிய நபர்களுக்குத் தொகை கொடுப்பதோடு மட்டுமின்றி அல்லது மூலப்பொருள்கள் கொடுப்பதோடு மட்டுமின்றி, அவர்கள் இன்னின்ன பண்டங்களைச் செய்ய வேண்டும் இன்னின்ன மாதிரிச் செய்யவேண்டும் இன்னின்ன துறைகள் அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்று இரண்டுக்கும் ஒரு 'கோஆர்டி

னேஷன்' ஏற்படுத்தி, அதற்கு இதைத் துணைத் தொழிலாக்கி, நட்டு, போல்டு மாதிரி சப்ளை செய்யக்கூடியதாக அமைத்து, பல பெரும் தொழில்களுக்கு இந்தச் சிறு தொழில்களை, உப-தொழில்களாக்க வழி வகைகளை அரசு செயல் படுத்தி, கால் கோலிவிடுமானால் இந்தத் துறை செம்மையாகப் பயன் தருமென் பதை அரசு உணர்ந்து, அந்த நெறியிலே செயல்படுமாவென்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அதைத்தான் இப்போது செய்து வருவதாக விளக்கிச் சொன்னேன். ஆங்காங்கே பெரிய தொழிற் சாலைகள் இருக்கின்றன. திருச்சியில் ஹெவி பாய்லர் தொழிற்சாலை இருக் கிறது. அதற்குப் பக்கத்திலே ஒரு இன்டஸ்டிரியல் எஸ்டேட்டை உருவாக்கி யிருக்கின்றோம். அங்கே தொழில் செய்ய முன்வருபவர்களுக்கு அந்த வசதிகள் செய்து கொடுக்கின்றோம். அதே போல அம்பத்தூரில் செய்கிறோம். இப்படிப் பெரிய தொழிற்சாலைகள் இருக்கிற இடங்களில் எளிதாக முடிந்து விடுகிறது. ஆனால் பரவலாக இருக்கும் தொழிற்சாலைகளுக்குத் தான் தனி யாக ஒரு திட்டம் போட்டு எல்லாத் தொழில் அதிபர்களையும் அழைத்து, அவர்களுடைய தேவைகளைக் கணித்தெடுத்து, நாமே இதற்கு 'பிசிபிள் ரிப்போர்ட்' தயாரித்து, அதை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். unempoyment scheme என்ற திட்டத்தின் அடிப்படையில் அவர்களின் உதவி கிடைத்தால், குறைந்தபட்சம் இன்ஜினியர்களுக்காவது சொந்தத் தொழில் கொடுத்துவிடலாமென்ற நம்பிக்கை இருந்து வருகிறது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இது போன்ற பயிற்சி பெற்ற நபர்கள் என்னென்ன தொழில்களைச் செய்யலாம் என்று அரசாங்கம் சிபாரிசு செய்கிறது என்று அறிய விரும்புகிறேன். இதற்கான மூலப் பொருள்கள் தமிழ் நாட்டிலே கிடைக்கின்றனவா ? இதற்குக் கொடுக்கக்கூடிய மான்யத்தை மத்திய சர்க்கார் வழங்குகிறதா, மாநில சர்க்கார் வழங்குகிறதா ? விவசாய சம்பந்தமான பயிற்சி பெற்ற பிறகு, டிராக்டர் போன்றவைகளுக்கு தமிழ் நாடு அரசாங்கம் என்ன உதவி செய்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் திட்டத்தினைப் பொறுத்த வரையில், நம்முடைய பணம் தான் கொடுக்கப்படுகிறது. இதை நாம் சிறிய சிறிய பட்டரை வைக்கக் கொடுக்கிறோம். பணத்தைக் கொடுக்கும்போது அவர்களுக்கு 'டூல்ஸ்' அரசு வாங்கிக்கொடுக்கிறது.

Administrator-General of Tamil Nadu

* 35. *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of trusts now administered by the Administrator-General of this State?